நாட்டில் தற்போதைய

# அணுமின் உற்பத்தி எத்தனை மெகாவாட் - விவரம் தருக!

## மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!



*புதுடெல்லி, மார்ச் 16-*

*நாட்டின் அணு மின் உற்பத்தியில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளதா? மொத்த அணுமின் உற்பத்தியில் 40 சதவிகிதம் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறதா? மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.*

*நமது நாட்டில் தற்போதைய அணுமின் உற்பத்தி சுமார் 8,000 மெகாவாட் என்பது உண்மையா? அதில் 40% தமிழ்நாட்டின் கல்பாக்கம் மற்றும் கூடங்குளம் ஆகிய இரு மின் நிலையங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்படுகிறதா?*

*அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் நாட்டின் பிற அணுமின் நிலையங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் அணுசக்தி விவரம் தருக?*

*13800 மெகாவாட் அணு மின்சாரம் உற்பத்தி செய்யும் ஒட்டுமொத்த திறன் கொண்ட 18 அணுமின் உலைகளை உருவாக்க அரசாங்கம் முன்மொழிகிறதா?*

*அப்படியானால் அதன் விவரங்கள் மற்றும் அணு மின் நிலையங்கள் இயக்கப்படவுள்ள இடங்களின் பட்டியல் மற்றும் ஒவ்வொரு மின் நிலையமும் நிறைவடையும் நேரம்; மற்றும் இந்த அணுமின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ஒன்றிய அரசால் அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நிதியுடன் செலவிடப்படக் கூடிய மொத்த நிதி எவ்வளவு? கதிர் ஆனந்த் எம்.பி. என கேள்வி எழுப்பினார்.*

**அமைச்சர் பதில்** : *ஒன்றிய அரசின் மாநில பணியாளர் பொது குறைகள் மற்றும் ஓய்வூதியங்களுக்கான அமைச்சர் மற்றும் பிரதமர் அலுவலகம் & அணுசக்தி துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம். தமிழ்நாட்டில் உள்ள அணு மின் நிலையங்களின் நிறுவப்பட்ட திறன் கல்பாக்கத்தில் உள்ள MAPS1&2 (2X220 MW) மற்றும் கூடங்குளத்தில் உள்ள KKNPP1&2 (2X1000 MW) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.*

*மொத்தத்தில், நிறுவப்பட்ட அணு மின் திறன் 2440 MW ஆகும் இது நாட்டின் மொத்த நிறுவப்பட்ட திறனில் (8180 MW) சுமார் 30% ஆகும்.*

*இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.*



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் மாநகராட்சியில் 3–ஆம் பகுதிக் கழகம் சார்பில் பகுதி செயலாளர் அ. தசரதன் ஏற்பாட்டில் நலத் திட்டங்கள் மற்றும் பொதுக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ., கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார்கள். உடன் மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் மாவட்ட பொருளாளர் சன் பிராண்டு கே.ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ் உள்ளிட்ட பகுதி கழக செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்திய அரசின் அடல் ஆய்வுச் சாலை திட்டம்,

# கிராமப்புற மக்களிடையே செயல்படுத்தும் எண்ணம் ஒன்றிய அரசிடம் உள்ளதா?

## மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!



*புதுடெல்லி, மார்ச் 16 -*

*திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 12 மார்ச் 2025 அன்று மக்களவையில், இந்திய அரசால், நகர்ப்புறங்களில் நிறைவேற்றப்படும் அடல் ஆய்வுச் சாலை திட்டம் கிரமாப்புற மக்களுக்கும் விரிவுபடுத்த ஏதேனும் திட்டங்கள் ஒன்றிய அரசிடம் உள்ளதா? என்றும், அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டங்கள் அமலாக்கத்துறை இணையமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.*

*ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டங்கள் அமலாக்கத்துறை இணையமைச்சர் அவர்கள்அளித்த பதில் பின்வருமாறு : -*

*அடல் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் அடல் ஆய்வுச்சாலைகள் 5945 அரசு பள்ளிகளிலும், 4055 தனியார் பள்ளிகளிலும் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் செயல்பட்டு வருகின்றன என்றும், ஆனால் அதற்கான பயிற்சியாளர்கள் குறித்த ஆய்வுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்றும், மொத்த பள்ளிகளில், 60 சதவீதத்திற்கும் மேலான பள்ளிகள் கிராமப்புற பகுதிகளில் செயல்படுகின்றன என்றும், முன்னேற்றத்தை நோக்கி நகரும் மாவட்டங்களில் 1022 பள்ளிகளில் அடல் ஆய்வுச்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும், இதற்கான வருடாந்தி ஆய்வுத் திட்டங்கள், நாட்காட்டிகள், வழிகாட்டு கையேடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டங்கள் அமலாக்கத்துறை இணையமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங் அவர்கள் மக்களவையில் திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.*

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ம.அசோக் குமார் தலைமை! சென்னை கிழக்கு

# மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் மாபெரும் கிரிக்கெட் போட்டி!

## தயாநிதிமாறன் எம்.பி. – கிரிக்கெட் வீரர் ஆர்.ஜேசு ராஜ் துவக்கி வைக்கின்றனர்!

*சென்னை, மார்ச் 16-*

*மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு - முன்னிலையில், ம. அசோக்குமார்- தலைமையில் சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்தநாள் - மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக, மாபெரும் கிரிக்கெட் போட்டி - கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி, முன்னாள் இந்திய A அணி கிரிக்கெட் வீரர் ஆர். ஜேசுராஜ் போட்டியை துவக்கி வைத்து சிறப்பிக்கின்றனர்.*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 24, சுழற்றி அடிக்கும் சூரியன்! தொடரும் வெற்றி நாயகன்!! எனும் தலைப்பில், மாபெரும் கிரிக்கெட் போட்டி- இன்று (16.03.2025 - ஞாயிற்றுக் கிழமை), காலை 8 மணியளவில், சென்னை, பெரம்பூர், டான்பாஸ்கோ பள்ளியில் நடைபெறுகிறது.*

*இப்புகழரங்கத்தில் சென்னை கிழக்கு மாவட்ட விளையாட்ட மேம்பாட்டு அணி அமைப்பாளர் ம.அசோக்குமார் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஐ.சி.எப்.வ. முரளிதரன், எ.நாகராசன், கே. சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார், டி. லோகேஷ், தேவஜவஹர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ். தனசேகர், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், பி.பழனி, இள.இளங்கோவன், எம். தாவுத்பீ, எஸ்.கே.ரமேஷ், எல்.டி.தாமஸ், ந.பொன்முடி, டி.சந்திரசேகர், பி. டி.சி.ரவி, பி.ஊமைதுரை, கே.பி.ஆதவன்மணி. மாமன்ற உறுப்பினர்கள்: பி.அமுதா, சி.ஸ்ரீதணி, டி. யோகபிரியா, கே.சாரதா முன்னிலை வகிக்கின்றனர்.*

*எ.பாபுராஜன், வி.ஜெ. திலிப்ராஜ், எஸ்.வடிவேல், எம்.கமலநாதன், ஆர்.சீனிவாசன், என்.மோகன்குமார், த.விஜயகுமார், பி. ஆர்.யஷ்வந்த்குமார், கே. ஜெயகுமார், சி.லதா, எம். இளங்கோவன், எ.விஜய் வரவேற்கின்றனர்.*

*இம்மாபெரும் கிரிக்கெட் போட்டியை கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி, முன்னாள் இந்திய A அணி கிரிக்கெட் வீரர் ஆர். ஜேசுராஜ் போட்டியை துவக்கி வைத்து சிறப்பிக்கின்றனர்*

*மேலும், இப்புகழரங்கத்தில் சென்னை பெருநகர மேயர் பிரியாராஜன், டாக்டர்.கலாநிதிவீராசாமி எம்.பி, இரா.கிரிராஜன் எம்.பி, கே.ஜார்ஜ்குமார், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், இரா. விடுதலை. விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணைச் செயலாளர்கள்: எஸ்.ஆர்.பார்த்திபன், சுரேஷ், ஜெ.மனோகரன், நிவேதா, ஜெசிகா, ஏ.வி. ஆர்.கோபால்ராம், எஸ். கார்த்திக், வாசிம் முபாரக், வெ.கௌதமன் தனஷ், எம். குமார், நா.ஆனந்த், பி.கே. பாபு, முகமது இஸ்ரத். மாநில நிர்வாகிகள்: கே. எஸ்.ரவிச்சந்திரன், சங்கரிநாராயணன், கவிஞர் நன்மாறன், தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, எஸ்.மணிமுடி, ஆர்.வரதன், கே.எஸ். எம்.நாதன், எம். விஜயகுமார், பரிதிஇளம்சுருதி, என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், இந்திரஜித். மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திசன், இசட்ஆசாத். பகுதிச் செயலாளர்கள்: கூ. பிஜெயின், வே.வாசு, எம். சாமிகண்ணு, செ. தமிழ் வேந்தன், டி.எஸ்.பி.இராஜ கோபல், எம்.டி.ஆர்.நாகராஜன், எஸ்.முரளி, சொ. வேலு, எ.ராஜசேகர், வி.சுதாகர் மற்றும் பொதுக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*இந்நலத்திட்ட விழாவில் பா.அன்பரசு நன்றி கூறுகிறார்.*


